# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
CC.No. 25/2012

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : A.R.Narayanan | Father/Husband Name : | Arulappan |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 09.11.2023. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 09th of November 2023.

முதல் விசாரணை: 09.11.2023

( **எதிரி ஆஜர்**)

நான் தற்போது செங்கல்பட்டு அரசு மருத்துவமனை கல்லூரியில் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.05.2011 அன்று நான் மேலூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவ அதிகாரியாக பணியிலிருந்தபோது மதியம் 02.45 மணியளவில் தனம் (வயது 48) த.பெ.சுப்பையா என்பவர் தன்னை தெரிந்த நபர் ஒருவர் மண்வெட்டியால் சுமார் 01.00 மணியளவில் அவரது வீட்டின் அருகில் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1 X 1 அளவில் மூக்கில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவரை உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். நீதிமன்றத்தில் உள்ள காயச்சான்று ஆவணத்தை சாட்சியிடம் காட்டி மேற்படி காயச்சான்று தங்களால் வழங்கப்பட்டதா என்று நீதிமன்றம் கேட்டுக்கொண்டு சாட்சி காயச்சான்று ஆவணத்தை பார்வையிட்டு என்னால் இவ்வழக்கிற்கு வழங்கப்பட்ட காயச்சான்று ஆவணம் தான் இவை என்று நீதிமன்றத்தில் உள்ள இவ்வழக்கில் உள்ள காயச்சான்று ஆவணத்தை பார்வையிட்டு சாட்சியமளித்தார். (**அந்த காயச்சான்று அசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> 09.11.2023 (எதிரி தரப்பில்)

போலீசார் இவ்வழக்கு சம்பந்தமாக உங்களை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 13.08.2011 அன்று காயச்சான்று வாங்கும் போது என்னை

விசாரித்தார்கள். இவ்வழக்கில் காயம்பட்ட நபரை மருத்துவமனையில் 25.07.2011ஆம் தேதி அட்மிஷன் போடப்பட்டதாக போலீசார் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. 27.05.2011ஆம் தேதியில் தான் உள்நோயாளியாக அனுமமதிக்கப்பட்டார். நீங்கள் 25.07.2011ஆம் தேதியில் தான் இவ்வழக்கில் காயம்பட்ட நபரை உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை அளித்துள்ளீர்கள். ஆனால் தற்போது வழக்கிற்காக பொய்யாக 27.05.2011ஆம் தேதியில் தான் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சாட்சியமளிக்கப்பட்டதாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு மூக்கில் ஏற்பட்ட சிராய்ப்பு காயம் என்பது கல் தடுக்கி கீழே விழும்போது சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. இவ்வழக்கில் காயத்தின் தன்மை, நிறம், வயது ஆகியவற்றை குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் இல்லை.